மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.130/2016

2026ம் ஆண்டு ஜுலை 29ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உத்தமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

29.07.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எங்கள் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டு உள்ளார். தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் முத்தப்ப நாடாருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அதற்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. முத்தப்ப நாடார், செல்லப்ப நாடார் மற்றும் காட்டப்ப நாடார் ஆகியோர்களின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து முத்தப்ப நாடார், கருப்பண நாடார், காட்டப்ப நாடார் ஆகியோர்கள் பேரிலான கிரைய ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

2. முத்தப்ப நாடார், கருப்பண நாடார், காட்டப்ப நாடார் ஆகியோர்கள் தாவா சொத்தை எவ்வாறு அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் பொதுவில் அனுபவம் செய்து வந்தார்கள். காட்டப்ப நாடார் என்கிற கிட்டப்ப நாடாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் இரண்டு மகன்கள். அவர்கள் பெயர் குப்பன நாடார் செல்லப்ப நாடார். காட்டப்பன் என்கிற கிட்டப்ப நாடார், செல்லப்ப நாடார் மற்றும் குப்பன நாடார் ஆகியோர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை

பொறுத்து சின்ன பழனி, பெரிய பழனி ஆகியோர்களுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை அவர்கள் சொத்துக்கள் பொதுவில் தான் உள்ளது.

3. காட்டப்பன் என்கிற கிட்டப்ப நாடார், செல்லப்ப நாடார் மற்றும் குப்பன நாடார் ஆகியோர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து சின்ன பழனி, பெரிய பழனி ஆகியோர்களுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்பதற்கான கிரைய ஆவணத்தை வாதி தாக்கல் செய்துள்ளதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காட்டப்பன் என்கிற கிட்டப்ப நாடார், செல்லப்ப நாடார் மற்றும் குப்பன நாடார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் க.ச.எண்கள் எனக்கு தெரியுமா என்றால் பழைய க.ச.எண்.333 மற்றும் 334 ஆகிய காலைகளில் பூமிகள் உள்ளது.

4. க.ச.எண்.333 காலையானது பி மற்றும் சி என உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி பூமிகளின் ரீ.ச.எண்.1103/2 என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 334 காலையில் ரீசர்வே எண். 1101/8 என்றால் அதன் ரீ.ச.எண்.1103. நாங்கள் எந்தெந்த காலைகளில் எவ்வளவு விஸ்தீரண பூமிகளை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் 333 காலையில் 1 ஏக்கர் 2 சென்ட் பூமிகள் மற்றும் 334 காலையில் 1 ஏக்கர் 15 சென்ட் பூமிகளையும் அனுபவம் செய்து வருகிறோம்.

5. கருப்பண்ண நாடாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் இரண்டு ஆண் மகன்கள். அவருக்கு பெண்மகள் கிடையாது. கிட்டப்ப நாடார் என்கிற காட்டப்ப நாடாருக்கு எத்தனை பெண்மக்கள் என்றால் சாமியாத்தாள் என்கிற ஒரு மகள் மற்றும் கருணையம்மாள் என்ற ஒரு மகள் உள்ளார்கள். முத்தப்ப நாடாருக்கு ஒரே ஆண்மகன் மட்டும்தான் வாரிசு. முத்தப்ப நாடார் என்பவருக்கு ஒரு ஆண் மகனும் இரண்டு பெண் மக்களும் வாரிசுகளாக உள்ளார்கள் என்றால் இல்லை ஒரு ஆண்மகன் மட்டும்தான் வாரிசு. முத்தப்ப நாடார் எந்த வருடம் இறந்தார்

என்றால் நான் ஒரு வயது குழந்தையாக இருக்கும்போதே அவர் இறந்துவிட்டார் சுமார் 55 ஆண்டுகள் இருக்கும்.

6. முத்தப்ப நாடாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவை என் வசம் உள்ளது அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால் முடியும். முத்தப்ப நாடார் என்பவருக்கு பழனியப்பன் என்கிற சின்ன பழனியும், சாமியாத்தாள் மற்றும் செல்லம்மாள் என்ற இரண்டு பெண் மக்களும் வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல. அதில் சாமியாத்தாள் என்பவர் தான் முத்தப்ப நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தனக்கு பங்கு உள்ளதாக பாகம் கேட்டு இந்த வழக்கை போட்டு உள்ளார் என்றால் அவர் பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளார். செல்லம்மாள் இறந்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

7. செல்லம்மாள் என்பவரின் வாரிசுகள் தான் 2 முதல் 5 பிரதிவாதிகள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. காட்டப்பன் என்கிற கிட்டப்ப நாடார் என்பவரின் மகளான சாமியாத்தாள் என்பவர் இதே நீதிமன்றத்தில் 2002 ஆம் ஆண்டு ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் தான் உள்ளார். மேற்படி வழக்கில் எனது தாயார் மற்றும் சின்ன பழனியப்பன் நாடார் பெரிய பழனியப்பன் நாடார் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்த்து இருந்தார் என்றால் இல்லை.

8. அந்த வழக்கில் என்ன தீர்ப்பானது என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் என் தாயார் ஆஜராகி இருந்தாரா இல்லையா என்பதை குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . மேற்படி சாமியாத்தாள் என்பவர் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண் 206/2002 வழக்கில் எனது தாயார் மற்றும் இவ்வழக்கின் வாதி சாமியாத்தாள் மட்டும் செல்லம்மாளின் வாரிசுகள் ஆகியோர்களும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு க.ச.எண்.333 பி மற்றும் சி காலைகளில்

பொதுவில் பாத்தியம் என தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. மேற்படி வழக்கின் தீர்ப்பு விவரங்களை நான் தெரிந்து கொண்டே தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காட்டப்பன் என்கிற கிட்டப்ப நாடாரின் மகன் செல்லப்பன் என்பவரின் மனைவி பெயர் மாரியம்மாள். மேற்படி மாரியம்மாள் என்பவர் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 110/2008 என்ற வழக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் தனக்கு 1999 இல் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் சொத்து பாத்தியம் என அவர் கேட்டிருந்தார் என்றால் ஆமாம்.

10. 2002 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஏற்கனவே தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் விளம்புகை பரிகாரம் வழங்க இயலாது என அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1999 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லாது என தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.206/2002 வழக்கிலும் அசல் வழக்கு எண்.110/2008 வழக்கிலும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பானது என்னையும் என் தாயாரையும் கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல.

11. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாதியின் தாயாருக்கு அறிவிப்பு அனுப்பி விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் தாயார் இறந்ததற்கு பின்பு அவரின் வாரிசுகள் என்ற முறையில் தான் நாங்கள் இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். வாதி மீது நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம் என்று சொன்னால் நாங்கள் கொடுக்கவில்லை அவர்தான் கொடுத்தார்.

12. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது நாங்கள் வாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் இல்லை. நாங்கள் அறிவிப்பு அனுப்பியதாக

எங்கள் தரப்பிலேயே ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. முத்தப்ப நாடாருக்கு பெண்மக்கள் இல்லை என்று நாங்கள் சொல்வது பொய் என்றும், முத்தப்ப நாடாருக்கு வாதி மற்றும் செல்லம்மாள் ஆகியவர்கள் பெண்வாரிசுகள் என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.206/2002 வழக்கில் வாதிகளும் ஒரு தரப்பினர்களாக உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

13. நாங்கள் தாவா சொத்துக்களை எவ்வாறு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் பாகப்பிரிவினையில் சி அட்டவணை சொத்துகளாக பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நானும் எனது அக்காவும் நடு பாகத்தை அனுபவம் செய்து வருகிறோம். எங்கள் பாகத்திற்கு வடபுற பாகம் யாருடையது என்றால் குப்புசாமி மற்றும் செல்லப்பன் ஆகியோர்களுடைய சொத்துக்கள். தென்புறம் யார்பாகம் உள்ளது என்றால் தங்கவேல் மற்றும் அர்ஜுனன் பாகம் உள்ளது.

14. எங்கள் அனுபவத்தில் இருந்து வரும் சொத்துக்கள் எந்த காலை எண்களில் உள்ளது என்றால் 333, ரீ.ச.எண்.1101 காலையில் உள்ளது. 334 காலையில் எந்த பாகத்தை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் நடுப்பாகத்தை தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் ஆமாம்.

15. 1999 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு அதன் அடிப்படையில் பூமிகள் உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் அந்த விவரங்களின் தாயாருக்கு தான் தெரியும் எனக்கு தெரியாதுநாங்கள் பாகப்பிரிவினை அடிப்படையில் பூமிகளை உட்பிரிவு செய்து அனுபவம் செய்து வரப்படவில்லை என்றும் 1979 ஆம் ஆண்டு காட்டப்ப நாடார் என்கிற கிட்டப்ப நாடார் முத்தப்ப நாடார் மற்றும் கருப்பண நாடார். கருப்பண்ண நாடாரின் வாரிசுகள் சின்ன பழனியப்ப நாடார் பெரிய பழனியப்பன் நாடார் ஆகியோர்கள் வடபுறம், தென்புறமாக மற்றும் நடுத்தரமாக வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

16. தாவா சொத்துக்கள் கூட்டு பட்டாவாக இருக்கும் காரணத்தினால் அது பொதுவில் இருந்து வருவதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வரை தாவா சொத்துக்களை நாங்கள் பொதுவில் அனுபவம் செய்து வருவதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களின் நடுப்புறத்தில் முத்தப்ப நாடாரின் வாரிசுகளான என் தாயார் பெரியம்மாள் மற்றும் வாதி சாமியாத்தாள் மற்றும் செல்லம்மாளின் வாரிசுகள் பொதுவில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பொதுவில் அனுபவம் உள்ளதால் பாகம் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

17. 1999 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினையானது நீதிமன்றத்தால் செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளதாலும், அசல் வழக்கு எண்.206/2002 வழக்கில் தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளதாலும் தாவா சொத்தில் கண்டுள்ள 2 ஏக்கர் 28 சென்ட் பூமிகளில் 3 ல் 1 பாகம் வாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே தாவா சொத்துக்களை பொருத்து பாகம் ஒதுக்கப்பட்டு தனித்தனியாக அனுபவம் செய்து வரும் நபர்களை மீண்டும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று நான் சொல்லி உள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

18. தாவா சொத்தில் 2 ஏக்கர் 28 சென்ட் பூமிகளை பொறுத்து முத்தப்ப நாடாரின் வாரிசுகள் பொதுவாக அனுபவம் செய்து வரும் நிலையில் கருப்பண நாடாரின் வாரிசுகள் மற்றும் கிட்டப்பன் என்கிற காட்டப்பன் நாடார் வாரிசுகள் ஆகியோர்களை இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்று நான் சொல்லியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை முத்தப்ப நாடாரின் வாரிசுகள் மட்டும் கூட்டாக அனுபவம் செய்து வரும் நிலையில் வாதிகளுக்கு 3 ல் 1 ஒரு பாகம் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

வாதி கோரியபடி இந்த வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணையை பிறக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் முத்தப்ப நாடாரின் வாரிசுகள் இல்லை என நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.29 18:56:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்